# அனைவருக்கும் வணக்கம்

Dr.A.V.Ram Prasad ECE HOD

# மரியாதை

- ஒரு சுவரிலே பந்தை எறிகின்ற போது அந்தப் பந்து திரும்பவும் நம்மை வந்தடைகின்றது

- அதேபோலேயே ஒரு மனிதன் மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்கின்ற போதே தனது மரியாதையைப் பெற்றுக் கொள்ளுகின்றான்.

- ஆறிவைப் பெற்றுத் தரும் கல்வியானது ஒரு மனிதனுக்கு மரியாதையைக் கொடுக்கின்றது.
- பெருக்கத்து வேண்டும் பணிவு என்பது போல் கற்கக் கற்க பணிவும் கற்றவர்களிடம் வந்து சேருகின்றது.
- எனவே மற்றவரை மதிக்கின்ற பண்பையும் பெற்றுக் கொள்ளுகின்றார்கள்.

- கற்றவர் சபையிலே நின்று பேசக்கூடிய சக்தியை கல்வியின் மூலம் ஒரு மனிதன் பெறுகின்ற போதே அம்மனிதன் பலரால் மதிக்கப்படுகின்றான்.
- எனவே மரியாதையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால், கல்வியில் பற்றுக் கொள்ள வேண்டும். அது பெற்றுத் தரும் மரியாதையைப் பாதுகாக்கும் தற்பாதுகாப்புக் கலையை.

# தமிழில் மரியாதை சொற்கள்

- "திரு":
  ஒருவரை எப்படி சொல்லி என்று தெரியவில்லையெனில் திரு. கொண்டு பயன்படுத்தலாம். திருமணமான அல்லது திருமணம் ஆகாத ஆண்களை அழைக்கும் விதம்.
  "திருவாட்டி"
  திருமணமான அல்லது திருமணமாகாத பெண்ணை அழைக்கும் விதம்.
  "திருமதி"
  திருமணமான பெண்ணை அழைக்கும் விதம்.

- "செல்வி"
  திருமணமாகாத பெண் இனத்தவரை அழைக்கும் முறை. திருவாட்டி என்றும் பயன்படுத்தலாம்.
  "முனைவர்"
  முனைவர் பட்டம் பெற்றவரை இதை கொண்டு அழைக்கலாம். திரு அல்லது திருவாட்டி என்றும் பயன்படுத்தலாம்.
  "மாண்புமிகு"
  அரசாங்கத்தின்(அரசியல்) உயர்ந்தபதவியில் இருப்பவரை அழைக்கும் முறை

- "மருத்துவர்"
  மருத்துவர் பட்டம் பெற்றவரை அழைக்கும் முறை. திரு என்றும் அழைக்கலாம்.
  "பொறியாளர்"
  பொறியாளர் பட்டம் பெற்றவரை அழைக்கும் முறை. திரு என்றும் அழைக்கலாம்.
  "அம்மையார்"
  அறுபது வயதிற்கு மேலே உள்ள பெண்களை அழைக்கும் முறை.
  "நீதியரசர்"
  நீதி மன்றத்தில் நீதி வழங்கும் பொறுப்பில் உள்ளவர்.

# நற்குணங்கள்

- நற்குணம் என்பது துர்க்குணம் என்ற பதத்தின் எதிர்ச் சொல்லாகும்
- *நற்குணம் என்பது: நன்மை செய்வதும், தீங்கு இழைக்காது தவிர்ந்து நடப்பதும், பிறரால் ஏற்படுகின்ற தீங்குகளைப் பொறுமையுடன் எதிர்கொள்வதுமாகும்*

- எந்தநிலையிலும் உண்மையையே பேசுதல், அன்பு ,அகிம்சை , எல்லா உயிர்களையும் நேசித்தல் ஆகிய நற்குணங்களை பின்பற்றுபவன் உயர்ந்த தெய்வீக நிலையை அடைவான்.
- நண்பர்களிடம் உண்மையான நட்புடன் பழகுதல், உயிர் இரக்கம் காட்டுதல், இல்லாதவர்களுக்கு கொடுத்து மகிழ்தல் ஆகிய நற்குணங்கள் ஒருவனுக்கு பிறவியிலேயே அமையவேண்டும்

# இறைவனை அடைவதற்கு தேவையான கீதை கூறும் நற்குணங்கள்

- அச்சமின்மை, பயமின்மை
- உள்ளத்தூய்மை
- தன்னடக்கம்
- நேர்மை
- மன உறுதி
- தற்பெருமை கொள்ளாமை
- சாந்தம் – பூரண நிம்மதி.

# நற்பழக்க வழக்கங்கள்

- ஒவ்வொரு தனி மனிதனின் வெற்றி, தோல்விக்கும்- அவனது பழக்க, வழக்கங்கள் மிக முக்கிய காரணங்களாக உள்ளன.
  நமது பழக்க வழக்கங்கள்- நம்மை மேன்மை அடைய செய்ய வேண்டுமே ஒழிய, அவைநம்மை படுகுழிக்கு தள்ளி விடக்கூடாது

- அதீத கோபம் கூட மாற்றிகொள்ள வேண்டிய ஒரு பழக்க வழக்கம் தான்
- நல்ல விஷயங்களை பாராட்டுவதே சிலரின் பழக்கமாக இருக்கும்
- நீண்ட ஆயுளுக்குத் தேவை நல்ல பழக்க வழக்கங்கள்

- நம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு ஒன்று தேவை என்றால் அது நல்ல பழக்க வழக்கம்தான்
- தொடர்ந்து கடைப்பிடித்து நடக்க ஆரம்பித்து விட்டோமானால் நாமே அதை விட்டுவிட நேர்ந்தாலும் நினைத்தாலும் அது நம்மை விட்டுப் போகாது.

- மற்றவர்களுடைய நல்ல பழக்க வழக்கங்களோடு நம்முடைய பழக்க வழக்கங்களையும் ஒப்பிட்டு பார்த்து நல்ல பழக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.
- தவறுகள் என்று தெரிகின்ற பழக்க வழக்கங்களை எல்லாம் நாளுக்கு நாள் மாற்றிக் கொண்டே வந்தால் பிறகு நல்லபழக்கம் மெதுவாக வந்துவிடும்.

- நம்முடைய வாழ்வு வளமாகவும், புகழுக் குரியதாகவும் பயனுள்ளதாகவும் விளங்க வேண்டும். அதற்கு வாழ்ந்த பலருடைய வாழ்க்கையையும் சாதனைகளையும் முயற்சி களையும் நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

- இறைவனை உள்ளத்திலே உளமாற பாடுவோம். தீய பழக்க வழக்கங்களை அறவே மறப்போம்!
- நல்ல பழக்க வழக்கங்களை பெறுவோம். நலம் பெறுவோம்!!


நன்றி
© kamna.webdunia.com